# சுருக்கம்

## சுனாமிக்குப் பிற்பட்ட ஆறுமாத அறிக்கையை சர்வோதயம் வெளியிடுகிறது

## அழிவின் அலைகளுக்கு எதிராக அன்பின் அலைகள்

இலங்கை 2005 ஐப்பசி 3 ~ உலக குடியிருப்பு தினத்தைக் குறிக்குமுகமாக ஜகர்த்தாவில் நடை பெற்ற விழாவில் ஐக்கிய நாடுகளின் கௌரவம் மிக்க விருதான ஐநா குடியிருப்பு விருது வழங்கப்பட்ட இந்த தினத்தில் 2004 மார்கழி 26 ஆம் திகதி நிகழ்ந்த சுனாமியைத் தொடர்ந்து சர்வோதயம் அதன் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையை வெளியிட்டுள்ளது.

முதலாவது சுனாமி பேரலை தாக்கிய சிலமணித்தியாலங்களிலிருந்து இன்றைய தினம்வரை சர்வோதயத்தின் சுனாமிக்குப் பிந்திய பணிகள் 226 கிராமங்களில் விரிவடைந்துள்ளன. 2008 ஆம் ஆண்டாகின்ற போது 1000 கிராமங்கள் பயனடைவதை இலக்காகக் கொண்ட பணிகள் நடைபெறுகின்றன. இன்னும் வந்து கொண்டிருக்கின்ற நன்கொடைகளோடு சேர்த்து நிறுவன ரீதியாகவும் தனிப்பட்ட நன்கொடையாளர்களிடமிருந்தும் சர்வோதயம் 397 மில்லியன் ரூபாவை ( US $ 3.97 மில் ) ப் பெற்றுள்ளது. இந் நன்கொடைகள் சர்வோதயத்தின் 5 - R மீளமைப்பு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய – நிவாரணம், புனர்வாழ்வு, புனரமைப்பு, மீண்டும் இணக்கத்தை ஏற்படுத்துதல், மீண்டும் எழுச்சியை ஏற்படுத்துதல் ~ சுனாமியிலிருந்து தேசோதயம் வரை பயன்படுத்தப்படுகிறது. தொடர்ந்தும் பயன்படுத்தப்படும்.

சர்வோதயத்தின் ஸ்தாபகரும் தலைவருமான கலாநிதி ஏ. ரி. ஆரியரத்னவின் கருத்துரை: எதிர்பாராத இந்த துயர சம்பவத்தின் முன்னே எமது பணியாளர்களில் பலர் அவர்களுடைய சொந்த வீடுகளை, நண்பர்களை, குடும்பத்தினரை இழந்தும் கூட நமது அனைத்து பணியாளர்கள், கிராமத்தவர்கள், சர்வதேச தொண்டர்கள் ஆகியோர் நாடு முழுவதும் அணிதிரண்டு எவ்வித தயக்கமும் இல்லாமல் எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து உடனடி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் இரவும், பகலும் வேலை செய்து சமூகங்களுக்கும் தமது சொந்த மக்களுக்கும் உதவினர் இத்தகைய தன்னலமற்ற பெருந்தன்மை மிக்க அர்ப்பணம் என்பது சர்வோதயத்தின் கொள்கையோடு இணைந்த ஒன்றாகும். ஆயினும் இப் பேரலையினால் ஏற்பட்ட துயரத்தை துடைப்பதற்காக ஆற்றப்பட்ட தன்னலம் கருதா சேவை என் இதயத்தை தொட்டது.

டிசம்பர் 26 ஆம் திகதியிலிருந்து சர்வோதய தலைமை நிலைய பணியாளர்கள், மாவட்ட நிலைய ஊழியர்கள், தொண்டர்கள் ஆகியோர் ஒன்று சேர்ந்து செயல் முறையில் உடனடி நிவாரண உதவிகளை மேற்கொண்டனர். மாசி மாதம் 8 ஆம் திகதியளவில் ரு.44.6 மில்லியன் ( யு எஸ் டொலர் 450,000 )
பெறுமதியான அத்தியாவசிய உணவுப் பொருட்கள், நீர், உடை, சப்பாத்துக்கள், கல்வி உபகரணங்கள் போன்றவை விநியோகிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச நலன்விரும்பிகளிடமிருந்தும், நன்கொடையாளர்களிடமிருந்தும் சர்வோதயம் 48 கப்பல்களில் கொள்கலன்களையும், 15 விமானங்களில் உதவிப் பொருட்களையும் பெற்றது. அவற்றில் 36 கொள்கலன்களை சமூக சேவைகள் திணைக்களத்திற்கு கையளித்தது.

சர்வோதய சாந்தி சேனா சமாதான இயக்கம் பெப்ரவரி மாதம் கிழக்கிலும் தெற்கிலும் 113 கிராமங்களில் நலன்புரி நிலையங்களை அமைத்தது. இவ்வியக்கத்தின் மரபுக்கேற்ப பாதிக்கப்படாத கிராமங்களிலிருந்த சாந்திசேனாத் தொண்டர்கள் பாதிக்கப்பட்ட கிராமங்களில் தங்கியிருந்து வேலை செய்ததோடு சக இலங்கையர்களுக்கு உளவியல் ரீதியான ஒத்துழைப்பையும் வழங்கி உதவினர்.

சுத்தப்படுத்துதல், சுகப்படுத்துதல், முதலுதவி, நீர் சுத்திகரிப்பு, போசாக்கு உதவி போன்றவற்றிற்கு முன்னுரிமையளிக்கப்பட்டது.

உடனடி நிவாரண உதவிகளைத் தொடர்ந்து 12 பிரிவுகளில் கவனம் செலுத்தப்படுகிறது. முகாம் மற்றும் சமூக முகாமைத்துவம், நீரும் துப்பரவேற்பாடும், சுகாதாரம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்துதல் வீடமைப்பும் மீளக் குடியேற்றலும் பெண்கள் பிள்ளைகள் அநாதைகள் உளவியல் மற்றும் ஆன்மிக சுகப்படுத்தல், வாழ்க்கைத் தொழிலுக்கு உதவுதல், ஆவணப்படுத்தலும் சட்ட உதவிகளும், சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் தணித்தல் ஒன்றிணைக்கப்பட்ட கிராமங்கள்.

முழுமையான நம்பகத்தன்மையையும் வெளிப்படைத் தன்மையையும் காட்டி வினைத்திறன் மிக்கதாகவும் நிலைபேறானதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் வேலைகளைச் செய்வதற்கு எப்பொழுதும் இலங்கை மக்களுடன் சேர்ந்து முழுமையான ஐக்கியத்துடன் வேலை செய்வதே சர்வோதயத்தின் பிரதான குறிக்கோளாகும்.

இந்த நாட்டை தேசிய மீள் எழுச்சியை நோக்கி இட்டுச் செல்வதற்கும் அனைத்து சமூகங்களையும் அணுகக் கூடிய தேசியநிகழ்ச்சித்திட்டத்தையும், கொள்கைகளையும் உருவாக்குவதை இலக்காகக் கொண்டுள்ள தொழில்சார் நிபுணத்துவமும், புலமையும் உள்ள 95 இலங்கைப் பிரசைகளைக் கொண்டுள்ள தேசிய மீள் எழுச்சிச் சபையொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இக் குழுவுக்குத் தலைவராக இருக்கின்றார். இது அனைத்து நிதியங்களுக்கும் நம்பகத் தன்மைக்கும் பொறுப்பாக இருக்கின்றது. சர்வோதயம் தொடர்ந்தும் சனாதிபதி செயலகம், அரசாங்கம, நன்கொடையளிக்கும் சமூக குழுக்கள், நாட்டை மீளக் கட்டியெழுப்பும் செயலணி என்பவற்றோடு நெருங்கிய தொடர்பை வைத்திருக்கின்ற அதே வேளை வறுமையை மீளக் கட்டியெழுப்ப வேண்டாம் என நாட்டை வலியுறுத்துகிறது. மேலும் முன் கூட்டியே எச்சரிக்கும் முறைமைகளுடன் இலங்கையின் சகல பிரதேசங்களிலும் மீளக் குடியமர்த்தலை துரிதப்படுத்தும்படியும் வலியுறுத்துகிறது.

சர்வோதயம் விரிவான நன்கொடை வழங்குவோர் நல்லுறவுக் கொள்கை ஒன்றை விருத்தி செய்துள்ளது. இது சர்வோதயத்தின் பக்கத்தில் நல்ல நிருவாகத்தை, கண்காணிப்பை, மதிப்பீட்டை உறுதிப்படுத்துகிறது.

சர்வோதயத்தின் வெப்தளம் நிவாரண நடவடிக்கை பற்றிய தகவல்களுடன் தினசரி காலத்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன இதன் பலனாக மிக வேகமாக சர்வதேச நன்கொடைகளின் பிரதான மூலமாக வந்துள்ளது. இவர்களின் $10 இலிருந்து $1 மில்லியன் வரையான உதவியினால் உடனடியான நடைமுறைப்படுத்தபடும் நிவாரண நடவடிக்கைகள் செயற்படுத்தபடுகிறது.

முற்றும்.

பத்திரிக்கையாளர் தொடர்பு
திருமதி. உதானி மென்டிஸ்
பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர், சர்வோதயம்

தொலைபேசி இல. 0112655255
மின்னஞ்சல். sarrutec@sltnet.lk

3 ஐப்பசி 2005

## படித்த பாடங்கள்

### சுனாமிக்குப் பிற்பட்ட ஆறுமாத அறிக்கையை சர்வோதயம் வெளியிடுகிறது

**இலங்கை 03 ஐப்பசி 2005** ~ இலங்கையின் முதன்மையான பயனுறுதிமிக்க அபிவிருத்தி அமைப்புகளில் ஒன்றான சர்வோதயம் அதன் அனுபவத்திலிருந்து கற்ற முக்கியமான பாடங்கள் சிலவற்றை இனம் கண்டுள்ளது.

சர்வோதயத்தின் 46 ஆண்டுளுக்கு மேற்பட்ட பணிகளை குறிப்பாக சுனாமி ஆழிப் பேரலை தாக்கத்திலிருந்து அது அடைந்த சாதனைகளை கௌரவிக்கும் முகமாக ஐக்கிய நாடுகளின் 2005 குடியிருப்பு தின விருது இன்று அதற்கு வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

எண்ணற்ற பல அமைப்புகள் இருப்பினும் சர்வோதயம் பல சவால்களை அனுபவித்திருந்தும் கூட அதன் பெருந்தன்மை மிக்க கொள்கைகள், பண்புமிக்க நிதிக் கொள்கைகள், உலகளாவிய ரீதியில் சர்வோதயத்தை நாடி வரும் அன்பின் அலைகள் என்பவை அதன் பணிகளுக்குத் தூண்டுதல் அளிக்கின்றன. அத்துடன் எதிர் பாராத இந்த அனர்த்தத்தின் விளைவாக மனித இதயத்தின் பெருந்தன்மை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது என்பதை அது நம்புகிறது,

கிழக்கிலிருந்து ஆழிப் பேரலை விரிவடைந்து வந்ததை அறிவிப்பதற்கு சர்வதேச ரீதியான மற்றும் தேசிய ரீதியான தொடர்பாடல் முறைகளும் அவசர எச்சரிக்கை முறைமைகளும் போதியளவு இன்மையால் பாரிய உயிரிழப்புகளை சந்திக்க வேண்டியிருந்தது.

நிலநடுக்கம் ஏற்பட்டு 90 நிமிடங்களின் பின்னர்தான் காலை 8.30க்கும் 10.30க்கும் இடையில் இலங்கையின் கரையோரப் பகுதி தாக்கப்பட்டது.

வென்கார்ட் மன்றதிதினால் வழிநடத்தப்படுகின்ற நிபுணர்கள் குழுவில் ஒன்றாக இருக்கின்ற சர்வோதயம் அதன் விரிவான ஆலோசனைகளைப் பின்பற்றி TAFREN அமைப்புக்கும் சனாதிபதி தெரிவுக் குழுவுக்கும் கருத்துரை ஆவணத்தை வழங்கியுள்ளது. அதை www.lirneasia.net/national-early -system/ என்ற வெப் தளத்தில் பெற முடியும்.

சர்வோதயம் அதன் சொந்த தொடர்பாடல் ஆற்றலை மேம்படுத்துவதற்கும் சர்வோதய அனர்த்த முகாமைத்துவ நிறுவனமொன்றை அமைத்து இயற்கை அனர்த்தங்கள் அல்லது மனிதனால் உருவாக்கப்படுகின்ற அனர்த்தங்களின் போது விரிவாக செயற்படுவதை மேம்படுத்துவதற்கும் முதலீடு செய்ய எண்ணியுள்ளது.

சர்வோதயம் அதன் கிராம சுய இராட்சிய திட்டத்தை விரிவாக்குவதற்கு முன்னர் இருந்ததை விட அதிகளவு உறுதியோடு செயற்படுகிறது. இத் திட்டம் கிராமத்து மக்களுக்கு வலுவூட்டுகின்றது. இதன் மூலம் அவர்கள் ஒரே அலகாக கூடி வேலை செய்வதற்கும் அவர்களுடைய சொந்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் உள்ளூர் மட்டத்தில் அதன் அடிப்படையில் செயற்படவும் முடியும். அனர்த்தம் கடுமையானதாக இருக்கின்ற போது பணிக்குழு ஆட்சிமுறையையும் அளவுக்கதிகமாக விதிமுறைகளைப் பின் பற்றுவதையும் கடந்து செயற்பட வேண்டியுள்ளது.

திடீரென வந்த நன்கொடைகளே சவால்களை தோற்றுவித்துள்ளன. கருத்திட்டங்களை அமுல் படுத்தும் பணிகளை மேற்கொள்வதோடு அவற்றை முகாமைப் படுத்தவும் வேண்டியுள்ளது. நன்கொடையாக வழங்கப்படும் நிதியங்களையும், அவற்றை வழங்குகின்றவர்களின் எதிர்பார்ப்புக்களையும் அமுல்ப்படுத்துகின்றவராக, அதற்குப் பாதுகாவலாக சர்வோதயம் அதன் பங்கை தீவிரமானதாக கருதி செயற்படுகிறது. சர்வோதய முகாமைத்துவத்தின் மீது, தகவல் தொழில் நுட்பத்தின் மீது பணியாளர்கள் மீது, அதன் திட்டங்கள் மீது, அதன் கட்டமைப்பின் மீது சுமத்தப்பட்டுள்ள சுமையை குறைத்து மதிப்பிடலாகாது.

மேலும் வினைத்திறனையும், பயனுறுதியையும் மேம்படுத்துவதற்கு உதவும் முகமாக பிரதான பணியாளர்கள் சிலர் அனர்த்தக் கருத்திட்ட செயலமர்வுகளில் பங்குபற்றியிருக்கின்றனர்.

**முற்றும்.**

**பத்திரிகையாளர் தொடர்பு**
திருமதி. உதானி மெண்டிஸ்
பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர், சர்வோதயம்
தொலைபேசி. 011 2655255
மின்னஞ்சல். sarrutec@sltnet.lk

**3 ஐப்பசி 2005**

## சர்வோதய சிரமதான பின்னணி

### அனைவருடைய எழுச்சிக்காக காலத்தை, எண்ணங்களை, சக்தியை பகிர்ந்துகொள்தல்

**அறிமுகம்**

சர்வோதயம் 1958ம் ஆண்டு கலாநிதி ஏ.ரீ. ஆரியரத்ன அவர்களால் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இன்று இலங்கை முழுவதும் 15000 கிராமங்களில் வாழும் மக்களை உள்ளடக்கி செயற்படுகிறது. இது சமாதானத்துக்காகவும், அபிவிருத்திக்காகவும் நாடளாவிய ரீதியில் உள்ள இயக்கமாகும். இது வளங்களை பகிர்ந்துகொள்வதை அடிப்படையாகக்கொண்ட வறுமையற்ற செல்வம் குவிந்திருக்காத சமுதாயத்தை தேடுகிறது. இது இலங்கையில் வாழ்கின்ற வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற அதேவேளை பங்கேற்பு முறையிலான சனநாயகத்தை சூழலியல் நிலைபேறான தன்மையை மனித உரிமைகளை மேம்படுத்துகிறது. சர்வோதயம் தர்ம ஸ்தாபனமாகவுள்ள அபிவிருத்தி அமைப்பாகும்.

**வேலையின் பரப்பெல்லை**

சர்வோதயத்தின் பணி சமூக மற்றும் தொழில் நுட்ப வலுவூட்டல் என்ற இரண்டு விடயங்களை உள்ளடக்கியதாக விரிவடைகின்றது. மேலும் இது சமாதானத்தையும், நிலைபேறான தேசிய நல் வாழ்வையும் ஒரே நேரத்தில் மேம்படுத்துகின்ற அதே நேரத்தில் கிராமிய மட்டத்தில் இலங்கை மக்களின் பாரம்பரிய விழுமியங்களையும், கலாச்சாரத்தையும் பாதுகாப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

**5 – R சுனாமி நிகழ்ச்சித் திட்டம் ~ நிவாரணத்திலிருந்து மீள் எழுச்சிக்கு**

இலங்கையின் 13 மாவட்டங்களில் உள்ள 226 கிராமங்களில் நிவாரண, புனரமைப்பு, மீண்டும் இணக்கத்தை ஏற்படுத்தல், மீள் எழுச்சியை ஏற்படுத்துதல் ஆகியவற்றை வழங்குவதற்கும் மேம்படுத்துவதற்கும் பாரிய பணிகளை சர்வோதயம் பொறுப்பெடுத்திருக்கின்றது.

**சர்வதேச அங்கீகாரம்**

சர்வோதயத்திற்கு பல சர்வதேச விருதுகளும் அங்கீகாரமும் கிடைத்துள்ளன. அண்மையில் சர்வோதயத்திற்கு கௌரவம் மிக்க ஐக்கிய நாடுகளின் 2005 ஐ.நா குடியிருப்பு கௌரவ விருது வழங்கப்பட்டுள்ளது. சர்வோதயத்தின் பணிகளை குறிப்பாக சுனாமி பேரலை தாக்கி சில மணித்தியாலங்களிலிருந்து ஆற்றிய சேவைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற சேவைகளையும் அங்கீகரித்து இக் கௌரவ விருது வழங்கப்படுகிறது.

**நிதி சார் சுய~நிலைபேறான தன்மையை நோக்கி பணியாற்றுதல்**

சர்வோதயத்தின் தத்துவத்தையும், கலாச்சாரத்தையும், விழுமியங்களையும் பாதுகாக்கின்ற அதேவேளை நிதி சார் சுயாதீனத்தையும் சுய~நிலைபேறான தன்மையையும் தேசிய மட்டத்திலும், அடிமட்டத்திலும் மேம்படுத்துவதற்கான தேவையை சர்வோதயம் முன்னொருபோதும் இல்லாதளவிற்கு இனங்கண்டிருக்கிறது. இதன் பொருட்டு தற்பொழுது ஒரு புதிய முன்னெடுப்பு ஸ்தாபிக்கப்படுகிறது. அத்துடன் சமூக சுற்றுலா முன்னெடுப்பு (CTI). இது அர்த்தமுள்ள ஒளிமயமான அனுபவங்களை தேடுகின்ற உள்நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் பணம் செலுத்தி வருகின்றவர்களுடன் எமது இயற்கை வளங்களையும் கிராமிய கலாச்சாரத்தையும், புலக்காட்சியையும் பகிர்ந்து கொள்வதன் மூலம் சர்வோதயத்தினதும் அதன் கீழ்மட்ட கிராமிய சமூகங்களினதும் கலாச்சார விழுமியங்களையும் நிலைபேறான வருமானத்தையும் மேம்படுத்துவதை குறியாகக் கொண்டிருக்கின்றது. இந்த அனுபவங்கள் ஒரு எளிமையான கிராமிய வீடொன்றில் தங்கியிருப்பது முதல் கிராமங்களில் உள்ள சமூக நிலையங்களுடன் இணைந்ததாக விருத்தியடைந்த இயற்கை சூழலில் தங்கியிருப்பது வரை விரிவடையும். ஒரு பிரித்தானிய சுற்றுலாப்பயண நிபுணர் இந்த முன்னெடுப்பை ஸ்தாபிப்பதில் தனது நேரத்தையும் நிபுணத்துவ அறிவையும் தொண்டு அடிப்படையில் தந்துதவுகிறார். உங்களுடைய ஆர்வத்தை அல்லது ஒத்துழைப்பை பதிவு செய்வதற்கு தயவுசெய்து மின்னஞ்சல் அனுப்புக. Catherine Leech (catherineleech@mac.com)

**சர்வோதயத்தின் நண்பர்கள்** உலகளாவிய ஒத்துழைப்பு வலையமைப்பு, தகவல் பரப்பல், நன்கொடைத் திட்டங்கள், தொழில்சார் தொண்டர் ஒத்துழைப்பு என்பவற்றை விருத்தி செய்வதற்கான பொறிமுறையொன்றை அமைக்கும் நடவடிக்கையில் சர்வோதயம் ஈடுபட்டுள்ளது. "சர்வோதயத்தின் நண்பர்கள்" 2006ம் ஆண்டு முற்பகுதியில் ஆரம்பிக்கப்படும்: உங்கள் விருப்பத்தை பதிவு செய்வதற்கு தயவு செய்து மின்னஞ்சலில் தொடர்புகொள்க. friends@sarvodaya.lk ஆரம்பிக்கும் போது சர்வோதயம் உங்களுடன் தொடர்புகொள்ளும்.

பத்திரிக்கையாளர் தொடர்பு:
திருமதி. உதானி மென்டிஸ்
பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர், சர்வோதயம்
தொ. பே. 0112655255
மின்னஞ்சல்: sarrutec@sltnet.lk